# உதகை, கொடைக்கானலில் தானியங்கி பால் விற்பனை இயந்திரம்

## ஆவின் நிறுவனம் அறிக்கை தாக்கல்




**சென்னை, ஜூலை 14:** நெகிழி உறைகளில் பால் விநியோகம் செய்வதற்குப் பதிலாக, உதகை மற்றும் கொடைக்கானலில் தானியங்கி பால் விற்பனை இயந்திரத்தை சோதனை அடிப்படையில் அமைக்க உள்ளதாக ஆவின் நிறுவனம் சென்னை உயர்நீதி மன்றத்தில் தகவல் தெரிவித்தது.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் வனவிலங்குகள் தொடர்பான வழக்குகளை விசாரித்து வரும் நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரதசக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வு பல் வேறு உத்தரவுகளைப் பிறப்பித்து வருகின்றனர்.

உதகை, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் நெகிழி தடை உத்தரவை அமல்படுத்தக் கோரிய வழக்கை விசாரித்த இந்தச் சிறப்பு அமர்வு, ஆவின் பால் விநியோகத்தை நெகிழி உறைகளுக்குப் பதிலாக மாற்று வழியைக் கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, இந்த வழக்கில் ஆவின் நிறுவனம் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், ஆவின் பால் விநியோகத்துக்கு மீண்டும் தானியங்கி விற்பனை இயந்திரத்தை அறிமுகப்படுத்த உள்ளோம். சோதனை அடிப்படையில் உதகை மற்றும் கொடைக்கானல் நகரங்களில் மக்கள்தொகை நெருக்கம் நிறைந்த பகுதிகளில் இந்த இயந்திரங்களை அமைக்கவுள்ளோம்.

இதற்காக உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனத்திடம் ஒரு இயந்திரம் ரூ.3.60 லட்சம் என்ற விலையில் இரு இயந்திரங்கள் வாங்கப்படவுள்ளன. இந்த இயந்திரங்களை நிறுவுவதற்கான உரிய அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்களை அமைத்தப் பிறகு அருகில் உள்ள வீடுகள், ஹோட்டல்கள் ஆகியவற்றுக்கு நெகிழி உறைகளில் பால் விநியோகிக்கக் கூடாது என மொத்த விற்பனையாளர்கள், முகவர்கள், வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்படவுள்ளது.

இந்த இயந்திரங்களை அமைத்தப் பிறகு, நெகிழி உறைகளில் பால் விற்பனைச் செய்வது நிறுத்தப்படும். 2 இடங்களிலும், தானியங்கி விற்பனை இயந்திரங்களின் செயல்பாடு, மக்களின் வரவேற்பு உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்யப்படும் என அந்த அறிக்கயில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

# கட்சித் தாவல் ஜனநாயகத்துக்கு எதிரானது

## சிபிஐ மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன்

**ஒசூர், ஜூலை 14:** கட்சித் தாவல் ஜனநாயகத்துக்கு எதிரானது என சிபிஐ மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்தார்.

மேக்கேதாட்டுவில் அணை கட்டக் கூடாது, காவிரி நதி நீரை திறந்துவிட வேண்டும் எனக் கூறி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் கர்நாடக மாநிலத்தை நோக்கி நடைப்பயணம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகராட்சி வணிக வளாகம் எதிரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளரும், தளி தொகுதி எம்எல்ஏவுமான டி.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நடைப்பயணத்தில், சிபிஐ மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் பங்கேற்று பேசினார்.

கர்நாடகத்தை நோக்கி நடைப்பயணம் சென்ற நூற்றுக்கணக்கான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரை போலீஸார் தளி சந்திப்பு முன்னதாக தடுத்து நிறுத்தினர். இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயிகள் சங்க மாநில துணைச் செயலாளர் எம்.லகுமய்யா, ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் மாதையன், அஞ்செட்டி பழனி, முன்னாள் மாவட்டச் செயலாளர் நஞ்சப்பா உள்பட 1,500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

அப்போது, சிபிஐ மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

2007 காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மற்றும் 2018 உச்சநீதி மன்ற தீர்ப்பை கர்நாடக அரசு மதிக்க வேண்டும். மேக்கேதாட்டில் கர்நாடக அரசு அணை கட்டக் கூடாது. டெல்டா மாவட்டங்கள் வறட்சியில் உள்ளன. நீதிமன்றத் தீர்ப்பின்படி நீரை திறக்க வேண்டும், அணை கட்டக் கூடாது என பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் கடிதம் எழுத வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தலில் சிபிஐ, சிபிஎம், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் ஆகிய மூன்று இடதுசாரிகள் இணைந்து ஒருங்கிணைப்பை உருவாக்கி உள்ளோம். இது தேர்தலுக்காக அல்லாமல், மக்களின் உரிமைகளுக்காக நாட்டை இடதுசாரி பக்கம் திருப்ப எடுத்த முடிவாகும்.

நாங்கள் பாஜக ஆர்எஸ்எஸ்-ஐ எதிர்க்கிறோம், தேவை ஏற்பட்டால் கம்யூனிஸ்ட்டுகளுடன் இணைந்து தேர்தலை சந்திப்போம். நாடுமுழுவதும் கட்சி கட்டமைப்பு உள்ளதால், பல லட்சம் வாக்குகளை பெறுவோம். சூழல்நிலைக்கு ஏற்ப தனித்தும் போட்டியிடுவோம். ஜனநாயக சக்திகளை இணைத்தே தேர்தலை சந்திப்போம்.

கட்சித் தாவல் என்பது ஜனநாயகத்துக்கு எதிரானது; குதிரை பேரத்தில் யார் ஈடுபட்டாலும் இந்திய கம்யூனிஸ்ட் எதிர்க்கும். அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்றார்.




ஒசூரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தளி எம்எல்ஏ டி.ராமச்சந்திரன், மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தலைமையிலான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர்.

# வீரவநல்லூர் இரட்டை கொலை வழக்கில் இருவர் சரண்

**சேரன்மகாதேவி, ஜூலை 14:** திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் அருகே தந்தை, மகன் கொலை செய்யப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளிகள் இருவர் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை சரணடைந்தனர்.

கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள மூலச்சி கிராமம், வடக்குத் தெருவைச் சேர்ந்தவர் பெருமாள் பாண்டியன். இதே பகுதியைச் சேர்ந்தவர் சித்திரபுத்திரன். இரு குடும்பத்தினரிடையே ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக பெருமாள் பாண்டியன், சித்திரபுத்திரன் மகன் சுப்பிரமணியன் உள்பட இரு தரப்பிலும் மொத்தம் 9 பேர் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், சித்திரபுத்திரனின் மற்றொரு மகனான விவசாயி காளிமுத்து (40), அவரது மகன் ஜெயராஜ் (5) ஆகியோரை ஜூலை 2-ஆம் தேதி பெருமாள் பாண்டியன் மகன்கள் உள்ளிட்டோர் கொலை செய்தனர்.

இந்த இரட்டை கொலை வழக்கில் தொடர்புடைய பெருமாள் பாண்டியன் தரப்பினரான மகேஷ் என்ற மாடசாமி, அவரது மனைவி விஜயா, 17 வயது மகன் உள்பட 13 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் சில நாள்களுக்கு முன்பு மூலச்சி, கீழத்தெருவைச் சேர்ந்த கிருஷ்ணன் என்ற அஜித் (25) என்பவரை போலீஸார் சுட்டுப்பிடித்தனர்.

இதனிடையே, இந்த வழக்கில் தொடர்புடைய பெருமாள் பாண்டியனின் மகன் அருள் (25), இதே பகுதியைச் சேர்ந்த வெள்ளப்பாண்டி மகன் தங்கத்துரை (29) ஆகிய இருவரும் செவ்வாய்க்கிழமை சேரன்மகாதேவி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

# தவறான சிகிச்சையால் குழந்தை உயிரிழப்பு?

## மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிவு

**சென்னை, ஜூலை 14:** சென்னை அம்பத்தூரைச் சேர்ந்த 5 வயது பெண் குழந்தை மருத்துவ அலட்சியத்தால் உயிரிழந்ததாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், அதில் தொடர்புடைய இரு தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம், மாநில மருத்துவ கவுன்சிலுக்கு கடிதம் எழுதியுள்ளது.

அதன்பேரில், மருத்துவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை நடத்தத் திட்டமிடப்பட்டது. அதில் ஒருவர் ஆஜராகாததால் விசாரணை நடவடிக்கைகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

அத்திப்பட்டு பகுதியைச் சேர்ந்த ஷினு அலெக்சாண்டர் மற்றும் ஜிஷா தம்பதியினரின் 5 வயது பெண் குழந்தை, காய்ச்சல் காரணமாக கடந்த டிச. 3-ஆம் தேதி அம்பத்தூரில் உள்ள தேஜா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. அடுத்த நாளே அக்குழந்தை உயிரிழந்தது.

மருத்துவர்களின் அலட்சியமே உயிரிழப்புக்குக் காரணம் என பெற்றோர் அளித்த புகாரின்பேரில் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதுதொடர்பாக மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் நடத்திய விசாரணையில், 'குழந்தைக்கு ரத்த அழுத்த தாழ்வு அதிர்ச்சி (ஹைப்போடென்சிவ் ஷாக்) ஏற்பட்டு இதயத் துடிப்பு நின்றதும், அதனை மருத்துவக் குழுவினர் முன்கூட்டியே கவனிக்கத் தவறியதும் கண்டறியப்பட்டது. எனவே, இதை மருத்துவ அலட்சியம் என விசாரணை அறிக்கை வரையறுத்தது.

மேலும், குழந்தை நல மருத்துவரிடம் ஆலோசனை பெறாதது, சிகிச்சை வழிமுறைகளை பின்பற்றாதது மற்றும் தவறான மருந்து அளவுகள் வழங்கியது ஆகியவை மருத்துவர்களின் அதீத கவனக்குறைவு என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, மறு உடற்கூறாய்வுக்காக, வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் அம்பத்தூர் காவல்துறையினரின் முன்னிலையில் கடந்த திங்கள்கிழமை குழந்தையின் உடல் தோண்டி எடுக்கப்பட்டது.

இதனிடையே, மாநில மருத்துவ கவுன்சிலுக்கு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணித் துறை அதிகாரிகள் எழுதிய கடிதத்தின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட மருத்துவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

இரு மருத்துவர்களில் ஒருவர் மட்டுமே ஆஜரானதால், இருவரையும் அடுத்த மாதம் மீண்டும் நேரில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை மற்றும் பிற மருத்துவ ஆவணங்களை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில மருத்துவ கவுன்சில் தெரிவித்துள்ளது.

## குடும்பப் பிரச்னை

# இரண்டு குழந்தைகளைக் கொன்று தந்தை தற்கொலை

**மேட்டூர், ஜூலை 14:** சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே 2 குழந்தைகளைக் கொன்று தந்தை தற்கொலை செய்துகொண்டார்.

மேட்டூரை அடுத்த ஆண்டிகரையைச் சேர்ந்தவர் வல்லரசு (26), கட்டடத் தொழிலாளி. இவரது மனைவி ஸ்ரீபிரியா (23). இருவருக்கும் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இவர்களது மகள் மைவிழி (4), மகன் தர்ஷன் (2).

தம்பதி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. போலீஸார் இருவரையும் அழைத்து அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர். கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் இருவரும் குஞ்சாண்டியூரில் வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வந்தனர்.

இந்த நிலையில், ஸ்ரீபிரியா கர்ப்பமானார். ஏற்கெனவே இரு குழந்தைகள் உள்ளதால் மூன்றாவது குழந்தை வேண்டாம் என ஸ்ரீபிரியா கூறியுள்ளார். ஆனால், அவரது கணவர் கருவை கலைக்கக் கூடாது என்று கூறியுள்ளார். இதனால், இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. இதையடுத்து, மேட்டூர் ராஜகணபதி நகரில் உள்ள தனது தாய் வீட்டுக்கு ஸ்ரீ பிரியா சென்றுவிட்டார். அங்கு தனியார் பால் பண்ணையில் வேலைக்கு சேர்ந்தார். மீண்டும் குஞ்சாண்டியூர் சென்ற ஸ்ரீபிரியாவிடம் வல்லரசு தகராறில் ஈடுபட்டார். இதனால் மீண்டும் மேட்டூரில் உள்ள தாய் வீட்டுக்கே ஸ்ரீபிரியா சென்றுவிட்டார்.

அவரை சமாதானம் செய்து அழைத்துச் செல்வதற்காக வல்லரசு, தனது பெரியப்பா மாதேஸ்வரன், தம்பி அஜித் ஆகியோருடன் மேட்டூர் ராஜகணபதி நகரில் உள்ள மாமியார் வீட்டுக்கு திங்கள்கிழமை சென்றார். அதன்பிறகு மாதேஸ்வரன், அஜித் ஆகிய இருவரும் தங்கள் வீட்டுக்குச் சென்றுவிட்டனர். வல்லரசு மட்டும் மாமியார் வீட்டில் இருந்துள்ளார். அன்று இரவு வல்லரசு தனது இரு குழந்தைகளுடன் தனி அறையில் தூங்கச் சென்றார். செவ்வாய்க்கிழமை காலை நீண்ட நேரமாகியும் கதவு திறக்கப்படாததால் மனைவி ஸ்ரீபிரியா, அவரது தாய் வெண்ணிலா இருவரும் கதவை தட்டினர். திறக்காததால் அக்கம்பக்கத்தினர் உதவியோடு கதவை உடைத்தனர்.

அப்போது, வீட்டின் இரும்புச் சட்டத்தில் 2 குழந்தைகளும் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்துகிடந்தன. வல்லரசும் அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்துகிடந்தார். குழந்தைகளைக் கொன்றுவிட்டு வல்லரசு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று போலீஸார் தெரிவித்தனர்.

மூன்று சடலங்களையும் மேட்டூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் சண்முகசுந்தரம் தலைமையிலான போலீஸார் கைப்பற்றி கூறாய்வுக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். சம்பவ இடத்தில் சேலம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் குத்தாலிங்கம் நேரில் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினார்.

# தூத்துக்குடியில் இறைச்சி வியாபாரி வெட்டிக் கொலை

**தூத்துக்குடி, ஜூலை 14:** இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்த இளைஞர்களைத் தட்டிக் கேட்ட இறைச்சி வியாபாரி வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

தூத்துக்குடி, தாளமுத்து நகர், திரேஸ் நகரைச் சேர்ந்தவர் மணி மகன் சேகர் (40). இவர், மாதா நகர் பகுதியில் பன்றி இறைச்சிக் கடை நடத்தி வந்தார். திங்கள்கிழமை (ஜூலை 13) இரவு 9.30 மணி அளவில் மாதா நகர் பத்திரகாளியம்மன் கோயில் அருகே நண்பர்கள் இருவருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது, அந்த வழியாக ஒரே இருசக்கர வாகனத்தில் 3 இளைஞர்கள் மதுபோதையில் அதிவேகமாக வந்தனர். அவர்களை வழிமறித்த சேகர், குழந்தைகள் நடமாடும் சிறிய தெருவுக்குள் ஏன் இவ்வளவு வேகமாகச் செல்கிறீர்கள் எனக் கண்டித்தார்.

இதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தில் சேகர் அந்த இளைஞர்களில் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. அங்கிருந்தவர்கள் இருதரப்பையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர். சிறிது நேரத்தில் தாக்கப்பட்ட இளைஞர் தனது நண்பர் ஒருவருடன் இருசக்கர வாகனத்தில் மீண்டும் அதே பகுதிக்கு வந்தார். அங்கு நின்று கொண்டிருந்த சேகரை இருவரும் சேர்ந்து அரிவாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றனர்.

பலத்த காயமடைந்த சேகர், தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து தாளமுத்துநகர் போலீஸார் வழக்குப் பதிந்து, தலைமறைவான இருவரையும் தேடி வருகின்றனர்.

## பெண்களை ஆபாசமாகப் படம் எடுத்து மிரட்டல்

# இளைஞருக்கு விதிக்கப்பட்ட வாழ்நாள் சிறை தண்டனையை உறுதி செய்தது உயர்நீதிமன்றம்

**மதுரை, ஜூலை 14:** பெண்களை ஆபாசமாகப் படம் எடுத்து மிரட்டிய இளைஞருக்கு நாகர்கோவில் விசாரணை நீதிமன்றம் விதித்த வாழ்நாள் சிறைத் தண்டனையை உறுதி செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

நாகர்கோவிலைச் சேர்ந்த காசி என்பவர் பல பெண்களை திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றி, ஆபாசமாக விடியோ, புகைப்படம் எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், தொடர்புடைய பெண்களின் விடியோ, புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிடப்போவதாக மிரட்டி அவர்களிடம் பணம் பறிப்பிலும் ஈடுபட்டார்.

இதுதொடர்பாக நாகர்கோவில், சென்னை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் புகார் அளித்ததையடுத்து, கடந்த 2020-ஆம் ஆண்டு காசியை போலீஸார் கைது செய்தனர்.

இதைத் தொடர்ந்து, அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மடிக் கணினிகளில் 120 பெண்களின் 400-க்கும் மேற்பட்ட விடியோக்கள், ஆபாச புகைப்படங்கள் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து, காசி மீது போக்சோ, பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது.

இந்த வழக்கு சிபிசிஐடி போலீஸார் விசாரணைக்கு மாற்றப்பட்டு, நாகர்கோவில் மகளிர் விரைவு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் நிறைவில், காசிக்கு இயற்கையாக மரணம் அடையும் வரை சிறைத் தண்டனையும், ரூ. 1.10 லட்சம் அபராதமும் விதித்து நீதிபதி ஜோசப் ஜாய் தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் காசி மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் என். ஆனந்த் வெங்கடேஷ், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படும் நபர்களின் தனிப்பட்ட உரிமையைப் பாதுகாப்பது, குற்றவாளிகளைத் தண்டிப்பது அரசமைப்பின் கடமை. தற்போது, சமூக ஊடகங்களால் நன்மைகள் இருந்தாலும், பாலியல் ரீதியாக சுரண்டலும் நடைபெறுகின்றன.

இளம்பெண்கள் ஒருவருடன் எவ்வளவு நம்பிக்கையாக பழகினாலும், தங்களுடைய தனிப்பட்ட புகைப்படங்களை, சமூக ஊடகங்கள் மூலம் பிறரிடம் பகிரக் கூடாது. இந்தத் தீர்ப்பானது, சமூக ஊடக உலகில் பெண்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். எனவே, இந்தத் தீர்ப்பு தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளில் வெளியிடப்படுகிறது.

ஆபாச புகைப்படங்களை வைத்து மிரட்டி இளம்பெண்களை பாலியல் ரீதியாக சுரண்டுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இளம்பெண்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இந்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் விதித்த தண்டனையில் தலையிடத் தேவையில்லை. குற்றச்சாட்டு சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, விசாரணை நீதிமன்றம் விதித்த வாழ்நாள் சிறைத் தண்டனை உறுதி செய்யப்படுகிறது. மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

# கஞ்சா விற்பனையில் முன்விரோதம்: இளைஞர் கொலை; 3 பேர் கைது

**புதுக்கோட்டை, ஜூலை 14:** புதுக்கோட்டையில் கஞ்சா விற்பதில் ஏற்பட்ட முன்விரோதத்தில் இளைஞரை கொலை செய்த 3 பேரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

புதுக்கோட்டை சந்தைப்பேட்டை பகுதி லாரி மார்க்கெட் பகுதியில் இளைஞர் ஒருவர் கைகள் கட்டப்பட்டு, வயிறு மற்றும் கைகளில் வெட்டுக்காயங்களுடன் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக நகர காவல்நிலைய போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் அங்குச் சென்ற போலீஸார் சடலத்தைக் கைப்பற்றி உடற்கூறாய்வுக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், இதுதொடர்பாக வழக்குப் பதிந்து நடத்திய முதல்கட்ட விசாரணையில், கொலை செய்யப்பட்டு கிடந்த நபர் கோவில்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் சீனிவாசன் மகன் நரி என்கிற தினேஷ் (19) என்பது தெரியவந்தது. மேலும், இவர் மீது காப்பர் கம்பி திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளது. மேலும், கஞ்சா விற்பனையிலும் ஈடுபட்டு வந்துள்ளார். இவருக்கும், சந்தைப்பேட்டை ஷூ மேக்கர் காலனியைச் சேர்ந்த ராஜூ மகன் மாரிமுத்து (27) என்பவருக்கும் இடையே கஞ்சா விற்பதில் கடந்த சில நாள்களுக்கு முன்பு தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் திங்கள்கிழமை நள்ளிரவு மாரிமுத்து மற்றும் அவரது நண்பர்கள் சந்தைப்பேட்டை ஷூ மேக்கர் காலனியைச் சேர்ந்த சந்திரசேகரன் மகன் முருகானந்தம் (22), சுப்பிரமணி மகன் ராகுல் (29) ஆகிய மூவரும் சேர்ந்து தினேஷை சந்தைப்பேட்டை லாரி மார்க்கெட் பகுதிக்கு வரவழைத்துள்ளனர்.

அங்கு 4 பேரும் மது அருந்திவிட்டு, தினேஷை மறைவான இடத்துக்கு அழைத்துச் சென்று, கைகளைக் கட்டிப் போட்டு சரமாரியாகத் தாக்கியுள்ளனர். பிறகு கை மற்றும் வயிற்றுப் பகுதியில் கத்தியால் குத்திவிட்டு, பிளாஸ்டிக் கயிற்றால் கழுத்தை நெரித்துக் கொலை செய்ததாக தெரியவந்தது.

இதையடுத்து, முருகானந்தம், ராகுல், மாரிமுத்து ஆகிய மூன்று பேரையும் போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர். பிறகு மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

முன்னதாக, சம்பவ இடத்தை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ரவீந்திரகுமார் குப்தா நேரில் பார்வையிட்டு, புலன் விசாரணைக்கு தனிப்படை அமைத்து உத்தரவிட்டார்.


சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
( SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : குன்னூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : திருமதி.S.சாந்தி – உரிமையாளர்: M/s. முல்லை ஏஜென்சீஸ், முகவரி :** 63, பரசுராமன் வீதி, குன்னூர், நீலகிரி – 643102. **நிரந்தர முகவரி :** கதவு எண்.5/150, சின்ன தடாகம் மெயின் ரோடு, சின்ன தடாகம் அஞ்சல், தடாகம், கோயம்புத்தூர் – 641108. **உத்திரவாதம் அளித்தவர் : திரு.V.சேதுராமன், முகவரி :** 63, பரசுராமன் வீதி, குன்னூர், நீலகிரி –643102. **நிரந்தர முகவரி :** கதவு எண்.5/150, சின்ன தடாகம் மெயின் ரோடு, சின்ன தடாகம் அஞ்சல், தடாகம், கோயம்புத்தூர் –641108. **கடன் நிலுவைத் தொகை : 13.07.2026 வரையில் ரூ.66,34,302.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 07.01.2023. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 24.03.2023. சொத்து விபரம் :** அசையாச் சொத்து – நீலகிரி பதிவு மாவட்டம், குன்னூர் சார்பதிவு மாவட்டம், குன்னூர் நகராட்சி, ஆப்பிள் சிட்டி பகுதியில், பழைய R S No. 725/3, T S No. B/11/71, சப்டிவிஷனுக்கு பின்பு B/11/71/2 –ன் படி அமைந்துள்ள 5 சென்ட் நிலம் மற்றும் கட்டிட மனை, அத்துடன் பொது உள்புற சாலைக்காக ஒதுக்கப்பட்ட 3.19 சென்ட் நிலத்தில் உள்ள 199 சதுர அடியில் ஏழில் ஒரு பங்கு உரிமை. **காப்பு விலை : ரூ.36,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.3,60,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 31.07.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 27.07.2026 முதல் 29.07.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 31.07.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, குன்னூர் கிளை : Mobile No : 8489903003, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / கிளை மேலாளர் : Mob No : 8489903057**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **31.07.2026**, மதியம் **01.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, குன்னூர் கிளை : Mobile No : 8489903003, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / கிளை மேலாளர் மொபைல் எண்.8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி : recvcoimro@centralbank.bank.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 13.07.2026**
**இடம் : கோயம்புத்தூர்**

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**